1 - 9 ஐப்பசி - ஐப்பசி - 1991

# எதிர்க்கட்சியினருக்கு எதிராக அரச எம். பிக்கள் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றினார்கள்

இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படும் சபாநாயகர் எம். எச். முஹமட்டுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பது என அரச பாராளுமன்றக் குழு நேற்று கூடியபோது தீர்மானித்தது. நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இரகஸிய வாக்கெடுப்பு தேவையில்லை எனவும் குழு தனது தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது நேற்று ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையில் கூடிய அரச பாராளுமன்றக் குழு எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளை தேசவிரோத, ஜனநாயக விரோத செயல்கள் என கண்டித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிஸ முன்னணி, ஈ.பி.ஆர் எல். எப், ஆகிய எதிர்க்கட்சியினரின் இந்நடவடிக்கைகள் இராணுவத்தினரையும், முப்படைகளுக்கும் தளபதியான ஜனாதிபதி பிரேமதாஸாவையும் குழப்பத்துக்குள்ளாக்கின —4 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு    விலை ரூபா: 5 - 00

முரசொலி

.. 05    ஒலி 270 பிரசோற்பத்தி புரட்டாதி 24 ( 10 - 10 - 1991 ) வியாழன்

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று சபையில்

# அரசுக்கு எதிரான பிரேரணையும் செல்லுபடியற்றது என அறிவிப்பு!

## எதிர்க்கட்சியினரின் இரண்டாவது முயற்சியும் தோல்வி

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை செல்லுபடியற்றதாகி விட்டது என நேற்று ..ளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகாவினால் ..றிவிக்கப்பட்டது. ஜனாதிபதிக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு ..ந்த அரசியல் குற்றப்பிரேரணை சபாநாயகரினால் செல்லுபடியா..து என அறிவித்து, அதை நிராகரித்ததைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினருக்கு ஏற்பட்ட இரண்டாவது 'அரசியல் அடி' இது எனக்கூறப்படுகிறது.

நேற்றுக்காலை பாராளுமன்..ம் கூடிய போது சபைக்கு ..லைமை தாங்கிய பிரதி சபா..கர் காமினி பொன்சேகா..க்கு எதிரான நம்பிக்கை..லாப் பிரேரணையை ..ாதத்திற்கு எடுத்துக்..ள்ளலாம் என அறிவித்..

..நற்றைய சபை நிகழ்ச்சி..யில் இதற்கு முதலிடமும் வழங்கப்பட்டிருந்தது. பிரதி சபாநாயகரின் கோரிக்கையை நிராகரித்த எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்பாக சபாநாயகரின் மீதான நம்பிக்கையில்லாத்தீர்மானமே விவாதிக்கப்பட வேண்டுமெனவும் அரசு மீதான நம்பிக்கையில்லாப் —04 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரான்லி திலகரத்னா சொல்கிறார்

## எதிர்க்கட்சியினரின் குழந்தைப்பிள்ளை விளையாட்டு

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணை ஒரு குழந்தைப் பிள்ளை விளையாட்டு என்று முன்னாள் சபாநாயகரும் சுதந்திரக் கட்சி எம் பியுமான ஸ்ரான்லி திலகரட்னா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர்இது —04 ஆம் பக்கம் பார்க்க

## அரசு தரப்புடன் சேர அத்துலத்முதலி தயாராம்?

ஜனாதிபதி மீதான குற்றவியல் பிரேரணை பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டதையடுத்து லலித் அத்துலத்முதலியும் ஐ தே. க அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த சிலரும் மீண்டும் அரசுதரப்பில் சேர விருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ தே. க. அதிருப்தியாளர்களை மீண்டும் அரச தரப்பில் சேருமாறும் இவர்களுக்கு மன்னிப்பு அளிக்கப்படும் எனவும் முன்னர் ஜனாதிபதி பிரே —04 ஆம் பக்கம் பார்க்க

## முஹமட் சபைக்கு வரமாட்டார் பிரதி சபாநாயகர் அறிவிப்பு!

சபாநாயகர் ஜனாப் எம் எச் முஹமட்டுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தொடர்ந்து நேற்று அவர் சபைக்கு சமுகம் தரவில்லை

இவருக்கு எதிரான பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்படும்வரை அவர் சபை நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கமாட்டார் என நேற்றும் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா சபையில் அறிவித்தார்.

தற்போது சபை நடவடிக்கைகளுக்கு பிரதி சபாநாயகரே தலைமை தாங்கி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முரசொலி வாசகப் பெருமக்களுக்கு

காகிதப் பற்றாக்குறை காரணமாக முரசொலி கடந்த ஒன்றரை மாத காலமாக வெளிவரவில்லை. கிடைத்த தாளைக் கொண்டு மீண்டும் பத்திரிகையை தொடங்கியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். முன்பு போல வாசக அன்பர்களுடைய ..ரவை நாடி நிற்கி..ோம்.

..பாது முகாமையாளர்
முரசொலி
..-10-91

## சபாநாயகருக்கு ஜனாதிபதி பாராட்டு

பாராளுமன்ற சபாநாயகர் எம். எச் முஹமட்டை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா பாராட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பாக சபாநாயகர் எம். எச் முஹமட் அளித்த தீர்ப்பையடுத்தே ஜனாதிபதி இவ்வாறு அவரைப் பாராட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழீழ - இந்தியப் போர் 4 ஆம் ஆண்டு நினைவு

தமிழீழ - இந்தியப் போர் தொடங்கிய நான்காவது ஆண்டு நினைவு இன்றாகும். இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து இங்கு அமைதி காப்பதற்கென வந்த இந்திய இராணுவம் தமிழ் மக்களுக்கு எதிரான தமது திட்டமிட்ட போரைக் கட்டவிழ்த்து விட்டது.

தமிழீழ-இந்தியப்போர் ஆரம்பித்த அதே ஒக்டோபர் 10 ஆம் திகதியன்றே முரசொலி, ஈழமுரசு தினசரிப் பத்திரிகை அலுவலகங்கள் இந்தியப் படைகளினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## எம். எச். முஹமட்டை அகற்றுவதே முதன்மையானது - வாசுதேவ

ஜனாப் எம், எச். முஹமட் சபாநாயகர் ஆசனத்தில் இருக்கும்வரை அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபையில் சமர்ப்பிக்க முடியாது என எதிர்க்கட்சியான நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடையே பேசிய வாசுதேவ, ''அரச தரப்பு ஆளும் கட்சிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிக்குமாறு கோருகின்றனர். ஆனால் எதிர்க்கட்சியினரானநாம்முத —04 ஆம் பக்கம் பார்க்க

## எதிர்பாராதவிதமாக எதிர்க்கட்சியினர் அமைதி!

..றுக்காலை பிரதி சபா.. தலைமையில் சபை ..போது எதிர்பாராத..க்கு அங்கு அமைதி ..யது.

..நற்றுமுன்தினம் சபையில் எதிர்க்கட்சியினர் கூச்சல் குழப்பம் ஏற்படுத்தியதால் சபை நேற்றுக்காலை வரை சபாநாயகர் முஹமட்டினால் ஒத்திவைக்கப்பட்டது. —04 ஆம் பக்கம் பார்க்க

## அரச தரப்பு எம். பிக்களுக்கு ஜனாதிபதி வேண்டுகோள்

பாராளுமன்றத்தில் சபாநாயகர் எம் எச். முஹமட்டுக்கும் உபசபாநாயகர் காமினி பொன்சேகாவுக்கும் அரச தரப்பு எம். பிக்கள் —04 ஆம் பக்கம் பார்க்க

# லலித்குழுவில் இடம்பெற்ற எம். பி. கைது!

## வெள்ளவத்தை கொள்ளையில் இவருக்கும் தொடர்பாம்

லலித் தலைமையிலான அதிருப்தியாளர் குழுவில் இடம்பெற்றிருந்த எம். பி. ஒருவரை கொள்ளை முயற்சி தொடர்பாக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெள்ளவத்தைப் பகுதியில் தொடர்ந்து நடைபெற்ற கொள்ளைகள் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கொள்ளையர்களில் ஒருவர் மேற்படி எம். பியின் பேரன் என அறியப்பட்டுள்ளதாகவும் மேலதிக தகவல்களை இந்த எம் பியை விசாரணை செய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம் எனவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

### சான்றிதழ்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி யசோதினி மாணிக்கவாசகர் என்பவருக்கு பேகன் பல்கலைக்கழகத்தினால் அனுப்பப்பட்ட சான்றிதழ் ஒன்று யாழ் செயலகத்தில் உள்ளது. உரியவர் யாழ் அரச அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

## வடபகுதி மாணவர்களுக்கு 'கெல்ற்' பயிற்சிப்படி இல்லை

வடபகுதியில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி ''கெல்ற்'' ஆங்கில பயிற்சி பெற்று வரும் மாணவர்களுக்கான பணக் கொடுப்பனவு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை தென்பகுதியில் கெல்ற் ஆங்கில பயிற்சி பெறும் மாணவர்க்கு நாளொன்றுக்கு 17 ரூபா படி வழங்கப்பட்டுவருகிறது.

இதற்கான நிதிமுழுவதும் வெளிநாட்டு அமைப்பொன்றினால் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது (01)

## 10 வயதுக்கு மேற்பட்டோருக்கு விசேட வதிவிட அட்டை!

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் வசிக்கும் 10 வயதுக்கு மேற்பட்ட சகலரும் விசேட அடையாள அட்டைகளைப் பெறல் வேண்டுமென படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

இந்தப் புதிய உத்தரவால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக அறிவிக்கப்படுகின்றது.

### பீன்ட் சிங்கின் மனைவி மரணம்

இந்திரா காந்தியைக் கொலை செய்த பீன்ட் சிங்கின் விதவை மனைவியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் கவுர் கல்ஸா (38) மாரடைப்பால் மரணமானதாக அறிவிக்கப்படுகின்றது.

1989 ஆம் ஆண்டு அகாலிதள் கட்சியின் சார்பாக லோகசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட 9 கடும்போக்கு எம்.பிக்களில் கல்ஸாவும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அமைய ஊழியர்களை நிரந்தரமாக்கப் பணிப்பு

அரசாங்க சேவை உள்ளூராட்சித் துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களில் 31 08 88 ம் திகதியில் 6மாத பூர்த்தி செய்த அனைத்து அமைய தற்காலிக ஊழியர்களையும் நிரந்தரமாக்குமாறு சுற்றறிக்கை மூலம் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது,

அமைய ஊழியர்கள் ஏற்கனவே பணியாற்றிய சேவைக்காலம் கணிப்பிடப்படும். 3 வருடகால அமையச் சேவையைப் புரிந்தவர் தகுதிகாண் சேவைக்கு உட்பட வேண்டியதில்லை.

ஆறுமாத அமையசேவையை 31 8 88 இல் பூர்த்தி செய்தோரை 01 09 88 தொடக்கம் நிரந்தர நியமனம் செய்ய இச் சுற்றறிக்கை வழிசெய்கிறது.

### திரையிட அனுமதி!

1983 ஜூலையில் இடம்பெற்ற இனக்கலவரத்தை மையமாகக் கொண்டு 'கொளுமூதே குனாட்டுவ' என்றபெயரில் சிங்களத் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இனக்கலவரம் முடிவடைந்தபின் 1986-ல் இப்படம் தயாரிக்கப்பட்டிருந்தாலும் கடந்த 5 வருடங்களாக இப்படத்தை திரையிட அனுமதி மறுக்கப்பட்டுவந்தது.

## பல்கலை. தகுதி காண் பரீட்சை நவம்பர் 14-ல் ஆரம்பம்

யாழ் பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகலைத் தத்துவமாணி தகுதிகாண் பரீட்சைகள் நவம்பர்மாதம் 14-ம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

கல்வி டிப்ளோமா பகுதி ஒன்று, இரண்டு பரீட்சார்த்திகளுக்கும் மீள் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை அனுமதி அட்டைகள் அவர்களது சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதுகலைமாணி தகுதிகாண் தேர்வு பரீட்சார்த்திகள் தங்களது அனுமதி அட்டைகளை யாழ் பல்கலைக்கழக தேர்வுக்கிளையில் நேரில் பெற்றுக்கொள்ளலாமென பதிவாளர் அறிவித்துள்ளார்.

## அனுராதபுரம் வைத்தியசாலை படையினரால் நிரம்பி வழிகிறது

வடக்கில் நடைபெறும் யுத்தத்தில் காயமடையும் படைவீரர்களினால் அனுராதபுரம் வைத்தியசாலை நிரம்பி வழிவதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதிகளவு படைவீரர்கள் அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளதினால் அவர்களுக்குச் சத்திர சிகிச்சை உட்பட ஏனைய சிகிச்சைகளை வழங்குவதற்குப் போதிய வைத்திய நிபுணர்கள் அங்கு இல்லை என கொழும்பிலிருந்து வைத்திய நிபுணர்களை அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

### பயிற்சிவகுப்பு ஆரம்பம்

சண்டிலிப்பாய் மணிமேகன் சனசமூக நிலையத்தினரால் தையல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வீட்டு மின்னிணைப்பு மோட்டார் றீவைண்டிங் பயிற்சி வகுப்புகளும் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# விளையாட்டு மைதானம்

### மாவீரர் மரியா போட்டிகள்

சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூகநிலையவிளையாட்டுக்குழுவினர் மாவீரர் லெப்டினன் மரியா (செல்வி புலேந்திரன் புவனேந்திரஜோதி) ஞாபகார்த்த யாழ் மாவட்ட கரபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றினை வெகு விரைவில் நடாத்தவுள்ளனர்.

ஆறுபேர் கொண்ட (ஓவர் கேம்) சுற்றுப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 15 ஆம் திகதியாகும் (18)

### வெங்சாகர் முன்னணியில்

அண்மையில் கொம்பியூற்றர் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின்படி, உலகளவில் கிரிக்கெட் வீரர்களில் துடுப்பெடுத்தாடுவதில் இந்திய அணி திலீப் வெங்சாகர் 911 கணிப்பீட்டுப் புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும், பாக்கிஸ்தான் வீரர் ஜாதுவத் மியண்டாட் 841 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்திலும் இருக்கிறார்கள்.

3, 4, 5 ஆவது இடங்களை முறையே 823 புள்ளிகளைப் பெற்ற ஆஸ்திரேலிய வீரர் அலன் பார்டரும், 804 புள்ளிகளைப் பெற்ற ரிச்சர்ட்ஸும், 750 புள்ளிகளைப் பெற்ற நியூஸிலாந்து வீரர் மாட்டின் குரோவும் பெற்றிருப்பதாகச் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

### ஸார்ஜாவில் தொடர் போட்டிகள்

தொடர்ச்சியாகச் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை ஸார்ஜா கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஸார்ஜாவில் நடைபெறவுள்ளது. ஆனால் இம்முறை இப்போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், மே இந்தியா ஆகிய 3 அணிகள் மாத்திரமே பங்குபற்றுகின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் ஆஸ்திரேலியாவில் பென்சன் அன் ஹெட்ஜஸ் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது இதில் 4 நாடுகள் பங்குபற்றுகின்றன,

அதனைத் தொடர்ந்து 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி, மார்ச் மாதங்களில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் முப்பது வருட இடைவெளியின் பின் தென்னாபிரிக்க அணியும் கலந்து கொள்ள இருப்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும். (16)

### ஆண்டு நிறைவுப் போட்டிகள்

அரியாலை சனசமூக நிலையம் தனது 42 ஆவது ஆண்டு நிறைவு விழாவை எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நடத்த உள்ளது. பிரதம விருந்தினராக யாழ் பரியோவான் கல்லூரி ... பந்தாட்டப் பயிற்றுநர் C. சூரியகுமாரும், சிறப்பு விருந்தினராக யாழ் செயலக புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதிப் பணிப்பாளர் செ. பத்மநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (16)

## கனிஷ்ட தொழில் நுட்ப பரீட்சை; நாளைவரை விண்ணப்பிக்கலாம்

பாடசாலைகளில் 9 ஆம் ஆண்டு (8-ம் வகுப்பு) மாணவர்களுக்கென முதல் முறையாக டிசம்பர் மாதம் நடாத்தப்படவுள்ள கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலைத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவங்கள் நாளை 21-ம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### நஷ்டஈடு

குவைத்திலிருந்து திரும்பியோருக்கு 2500 டாலர்களுக்குப் பதிலாக 10 ஆயிரம் அமெரிக்க டாலர்களை பெற்றுக்கொடுக்க அரசு முயற்சியெடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# 'களத்தில் குறிதவறாது துப்பாக்கி சுடுவதில் சிப்பாய்களைவிட புலிகள் திறமை மிக்கவர்கள்'

குறிதவறாது சுடுவதில் விடுதலை புலி வீரர்கள் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்களைவிட திறமை மிக்கவர்களென இராணுவ வல்லுநர்களின் கணிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

ஆனையிறவு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் ஜூலை 10 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரை விடுதலைப்புலிகளுக்கும், ஸ்ரீலங்காப் படைகளுக்குமிடையே இடம்பெற்ற சமரை மையமாகக் கொண்டு இராணுவ வல்லுநர்கள் இவ் ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஆகாய கடல் வெளி இராணுவ நடவடிக்கையில் காயமடைந்த 1500 புலிவீரர்களில் 480 பேர் மட்டுமே துப்பாக்கி சூட்டுக்காயங்களுக்கு உள்ளானவர்கள் என்ற தகவலையும், காயமடைந்த 885 இராணுவ சிப்பாய்களில் 720 பேர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கு உள்ளானார்கள் என்ற கொழும்பு அரச தரப்பு ஆங்கில பத்திரிகைத் தகவலையும் அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

25 நாட்கள் நடந்த சண்டையில் 720 சிப்பாய்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்குள்ளாகியுள்ள அதேவேளை 31 நாள் சண்டையில் 480 போராளிகள் மட்டுமே துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இது துப்பாக்கி சுடுவதில் காணப்படும் புலிவீரர்களின் திறமையை மட்டுமன்றி, ஸ்ரீலங்காப் படைகளின் பாரிய படைக்கல சக்திக்குள்ளும் புலிவீரர்கள் காட்டிய துணிவு, வீரம், தந்திரம், அர்ப்பணம் ஆகியவை உள்ளிட்ட போர்த்திறனை துலாம்பரமாகக் காட்டுவதாகவும் இவ் ஆய்வு குறிப்பிடுகிறது.

இந்தச் சமரில் பயன்படுத்தப்பட்ட ரவைகளை நோக்கின் புலிப்படைக்கும், இராணுவத்திற்குமிடையில் படைக்கலச் சக்தி 1:25 என்ற விகிதத்தில் இருந்ததாகவும் ஆய்வாளர்களினால் கணிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்த பூரண விவரங்கள் 'விடுதலைப் புலிகள்' குரல் 25 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## கொழும்பு மேடைகளில் மீண்டும் ஜே. ஆர்!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதம அமைப்பாளரும் எம் பியுமான அனுரா பண்டாரநாயக்காவும், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவும் கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் மிக நெருக்கமாக உரையாடிக்கொண்டிருக்கும் புகைப்படத்தை கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில பத்திரிகை பிரசுரித்துள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா கொழும்பில் வைபவங்கள் பலவற்றில் தற்பொழுது கலந்துகொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## தடைவிதிக்கப்படாத பொருளுக்கும் கிழக்கில் அனுமதி மறுப்பு!

ஆயுதங்கள், வெடி மருந்துகள், யூரியா ஆகிய பொருள்களுக்கு மட்டுமே கிழக்கு மாகாணத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் படையினர் மட்டு நகரிலிருந்து தீப்பெட்டி, கற்பூரம், பாக்கு, பொலித்தீன், சிமெந்து கம்பிகள், மருந்து வகைகள் ஆகியவற்றை எடுத்துச் செல்ல அனுமதி மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மட்டு மாவட்டத்தில் கிராமப்புற மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக புகாரிடப்பட்டுள்ளது.

தடை விதிக்கப்படாத பல பொருள்கள் மட்டு நகரிலிருந்து எடுத்துச் செல்லப்படும் போது அவை சோதனை முகாம்களில் வைத்துப் பறிமுதல் செய்யப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (08)

## தேசிய பட்டியல் எம். பி யை நியமிக்க ஐ. சோ. மு. முயற்சி

பாராளுமன்றத்தில் நீண்ட காலமாக நிரப்பப்படாதிருக்கும் ஐக்கிய சோசலிஸ முன்னணி தேசிய பட்டியல் ஆசனத்தை நிரப்ப இப்பொழுது நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுதொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்க முன்னணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, லங்காசமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய நான்கும் நேற்றுக்கூடவிருந்தன.

ஐக்கிய சோசலிஸமுன்னணி சார்பில் எம். பி. யாகத்தெரிவு செய்யப்பட்ட கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா பதவியேற்கும் முன்பே காலமானதையடுத்து அந்த இடத்திற்கு இதுவரை எவரும் நியமனம் செய்யப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நடுக்கடலில் மோதல்! கொரிய மாலுமி பலி

நடுக்கடலில் 'ஓர்கிட்' என்ற எண்ணெய் தாங்கிக் கப்பலில் நடந்த மோதலில் கொங் ஜொங்சு என்ற கொரிய மாலுமி கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரைக் கொலை செய்ததாக சக கொரிய மாலுமி ஒருவர் கொழும்பு துறைமுகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கைக்கரையில் இருந்து 110மைல்களுக்கு அப்பால் இச்சம்பவம் நடந்துள்ளது.

இந்த ஜப்பானியக் கப்பலின் கப்டன் அங்கு உதவிகோரி உலகம் பூராவும் அனுப்பிய தகவலை அடுத்து இக்கப்பல் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டது.

## இலங்கைக்கு உதவி வழங்க அமெரிக்கா அதிக ஆர்வம்

1992 ஆம் நிதி ஆண்டில் இலங்கைக்கு அநேகமாக 164 கோடியே 40 இலட்சம் ரூபா நிதி கிடைக்கலாமென்று கொழும்பிலுள்ள தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வருடம் செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதியுடன் அமெரிக்க நிதி வருடத்துக்குப் பின்னர் இலங்கைக்கான இந்த நிதி உதவிக்கு அமெரிக்கா அங்கீகாரம் வழங்குமென்று இந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

1991 ஆம் ஆண்டு 2 கோடியே 10 இலட்சம் அமெரிக்க டாலர்கள் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இலங்கைக்கு 4 கோடியே 40 இலட்சம் டாலர்கள் கிடைத்தன. (08)

## முல்லையிலும் ஆட்சேர்ப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுநர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இரண்டு வினாப்பத்திரங்களுக்கு தோற்றுமாறு வேண்டப்படுவர். முல்லைத்தீவு மாவட்டத்தில் பிறந்தவர் அல்லது தேர்தல் இடாப்பில் பதிவு உள்ளவர்களே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்குள் அல்லது அதற்கு முன்னர் முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். (08)

## உல்லாசப்படகுச்சேவை நிறுத்தம் இறங்குதுறையும் அகற்றப்பட்டது

திருகோணமலைக் கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த உல்லாசப்படகுச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கெனக் கடற்கரைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சிறிய இறங்குதுறையும் அகற்றப்பட்டுள்ளது.

படையினரின் உத்தரவுக்கமையவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

## 'ஒப்சேவர்' பத்திரிகை மீது ஸ்ரீமாவோ மானநஷ்ட வழக்கு

எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க லேக்கவுஸ் நிறுவனப் பத்திரிகையான 'ஒப்சேவர்' மீது ஒருகோடியே 75 லட்சம் மான நஷ்டம் கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வாண்டு பெப்ரவரி 17 ஆம், 18 ஆம் திகதிகளிலும், மார்ச் 10 ஆம் திகதியும் ஒப்சேவர் பத்திரிகைகளில் திருமதி பண்டாரநாயக்காவுக்கு எதிராக ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

## மாணவர் பொருட்காட்சி

மருதனார்மடம் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் பொருட்காட்சி வரும் வெள்ளிக்கிழமை 11 ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது 37

## சென்னையிலிருந்து திரும்பிய கிளிநொச்சி வாசி கைது!

சென்னையிலிருந்து கொழும்பு திரும்பிய கிளிநொச்சியைச் சேர்ந்த நடுத்தர வயதுடைய தமிழர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினைக் கடத்தி வர முயன்ற போதே கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

## சுட்டெண்

செப்டம்பர் மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 1130.3 என தொகை மதிப்புப்புள்ளிவிவரத்திணைக்களம் அறிவித்துள்ளது.

## பொலிஸ் அதிகாரி விபத்தில் பலி

அம்பாந்தோட்டை பொலிஸ் சுப்பிரின்டன் நோர்மன் அபயசிங்க லொறியினால் மோதப்பட்டு கொழும்புப் பெரியாஸ்பத்திரியில் மரணமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

## 'தமிழ்ச்சோலை' வானொலியின் ஆண்டு விழாப் போட்டிகள்

கனடா ஒன்ராரியோ 'தமிழ்ச்சோலை' வானொலி நிகழ்ச்சியின் 5-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அகில உலக ரீதியிலான இலக்கியப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுகதை, கவிதை, நாடகப் பிரதி ஆக்கம் என்பவற்றில் இப்போட்டிகள் நடாத்தப்படும்.

இவ்வருடம் டிசம்பர் மாதம் 15-ம்திகதிக்கு முன்னர் கனடா ஒன்ராரியோவில் உள்ள உலகத்தமிழர் இயக்கத்திற்கு ஆக்கங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கனடாவில் ஒலிபரப்பப்படும் 'தமிழ்ச்சோலை' நிகழ்ச்சி 1987-ம் ஆண்டு தை மாதம் 4-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது பிரதி ஞாயிறுகளிலும் காலை 10 மணி முதல் 10.30 மணி வரை மத்திய அலைவரிசை 1320 எண்ணில் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது.

## பாலர்களின் பல்சுவை நிகழ்ச்சி

யாழ் சென் ஜோன் ஸ் பாலர் பாடசாலையில் பயிலும் பாலர்களின் பல்சுவை நிகழ்ச்சிகள், சமீபத்தில் பாடசாலை அரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றன.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அருட் திரு செல்வரெட்டினம் அடிகளார் குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு என்ற விடயம் பற்றி உரையாற்றினார்.

## புல்ஜன்ஸ்மீது பிடிவிறாந்து கொழும்பு நீதிமன்று பிறப்பித்தது

பேராசிரியர் புல்ஜன்ஸ் மீது கொழும்பு மேல் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் இவர் விரிவுரையாற்றி வருகிறார்.

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவும் வேறு இருவரும் இவரைக் கடத்திய வழக்குத் தொடர்பாகவே, பேராசிரியர் புல்ஜன்ஸ் மீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு பேராசிரியர் இன்றி நீண்ட காலமாக ஒத்திவைக்கப்படுவதாக காமினி திஸநாயக்காவின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனுவையடுத்தே பேராசிரியர் புல்ஜன்ஸ் மீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.


உ

முருகன் துணை

நாதஸ்வர மேதை, நாதஸ்வர கலாநிதி, கலாசூரி

திரு. என். கே. பத்மநாதன்

அவர்களின்

மணி விழா அழைப்பு

இடம்: நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபம்

காலம்: பிரசோற்பத்தி ஆண்டு புரட்டாதி மாதம் 28 ஆம் நாள் (14 - 10 - 1991) திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் அறுபதாம் கல்யாண வைபவம்; 14, 15, 16 - 10 - 1991 மாலை 3 மணிமுதல் மணி விழாக் கலை நிகழ்வுகள்.

★ இதனையே தனிப்பட்ட அழைப்பாகக் கொண்டு வருகை தருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ தனிப்பட்ட கௌரவங்கள் செய்ய விரும்புவோர், மணிவிழாக் குழுவுடன் முன்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகிறோம்

இ. ஜெயராஜ்
தலைவர்

மணிவிழாச்சபை
கேணியடி, திருநெல்வேலி

பொன் சுந்தரலிங்கம்
வீ. கே. பஞ்சமூர்த்தி
இணைச்செயலாளர்கள்

10001

# 12 நாள்களாக நடைபெற்ற கலைஞானியின் பொருட்காட்சி

யாழ் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் 12 நாள்களாக நடைபெற்று வந்த மாமனிதர் கலைஞானி அவர்களின் அரும் பொருட்காட்சி நேற்றுடன் முடிவடைந்தது.

தொன்மைவாய்ந்தபொருள்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் இக்கண்காட்சியைக் கண்டு களித்தனர்.

1974-ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கலைஞானியின் கண்காட்சி இடம் பெற்றதற்குப் பின்னர் பதினாறு வருடங்களுக்குப் பின்னர் யாழ் பல்கலைக்கழக இந்து மாமன்றத்தின் ஆதரவுடன் இது நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

கலைஞானி அவர்கள் ஜூன் மாதம் சாவகச்சேரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவின் போது தலைவர் பிரபாகரனால் மாமனிதராகத் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டு அதி உயர்பரிசினைப் பெற்றவர்களில் ஒருவராவர். (07)

# யாழ் ஆஸ்பத்திரியில் ஜெனரேட்டர்கள் பழுது

யாழ் போதனா வைத்தியசாலையில் இயங்கி வந்த இரு ஜெனரேட்டர்கள் நேற்றுமுன்தினம் முதல் பழுதடைந்துள்ளதால் இங்குள்ள முக்கிய பகுதிகள் செயலிழந்த நிலையில் உள்ளன.

இவற்றைத் திருத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

தற்போது இங்கு ஒரேயொரு ஜெனரேட்டர் மட்டுமே இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (04)

# ஊரடங்கு நீக்கம் தாக்குதல் ஆரம்பமாம்!

முல்லைத்திவு, கிளிநொச்சி பகுதிகளில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணி முதல் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது

இதேவேளை நேற்று முன்தினம் முதல் கிளிநொச்சிப் பகுதியில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதாகவும் நேற்று மாலை பாதுகாப்பு அமைச்சு தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

**அரசதரப்பு...**

ஆதரவு வழங்கவேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸ அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மீதும், உப சபாநாயகர் மீதும் எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தால் அதற்கு எதிராக அரச தரப்பு எம் பிக்கள் வாக்களிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

**அரசுக்கு**

பிரேரணையை ஐந்து தினங்களில் விவாதிக்க அரசதரப்பு மறுத்ததினால் அத்தீர்மானத்தைஎதிர்க்கட்சியினர் உடனடியாக முதலாவதாக விவாதிக்க முடியாது என ஆட்சேபனை தெரிவித்தார்

இதனால் பிரதி சபாநாயகர் நேற்றைய நிகழ்ச்சி நிரலில் முதலாவதாக இடம் பெற்றிருந்த அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிக்க எதிர்க்கட்சியினர் மறுத்துவிட்டதால் அது காலாவதியாகி விட்டது எனவும் அப்பிரேரணை இனிச்செல்லுபடியாகாது எனவும் சபையில் அறிவித்தார்.

இன்று சபை மீண்டும் கூடும் போது சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த இரு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் நிராகரிக்கப்பட்டதால் எதிர்க்கட்சிக்கு பலத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் சபாநாயகருக்குஎதிரான இன்றைய நம்பிக்கையில்லாத் தீர்மானமும் எதிர்க்கட்சியினருக்குதோல்வியாகவே அமைந்துவிடலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

# தூதரகப் பொறுப்பாளர் புதுடில்லியில் கடத்தல்

புதுடில்லியில் உள்ள ருமேனியநாட்டு தூதரகப் பொறுப்பாளர் சீக்கிய தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலைகாரில்சென்றுகொண்டிருந்த இவரை இருவர் துப்பாக்கிமுனையில் மிரட்டிகாருடனேயேகடத்திச் சென்றுவிட்டனர்.

சில மாதங்களின் முன்னர் ருமேனியாவில் உள்ள இந்திய தூதுவர் மீது துப்பாக்கிச் சூடு நடாத்திய சீக்கிய தீவிரவாதிகள் இருவர் ருமேனியன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**எம். எச்.**

லில் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையையே விவாதிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்''

''நம்பிக்கையற்ற சபாநாயகர் முஹமட் தலைமையில் எவ்வாறு அரசுக்கு எதிரான பிரேரணையை விவாதிக்க முடியும்?'' என்றார்.

**எதிர்க்கட்சியினரின...**

தொடர்பாக எடுத்த நடவடிக்கை அவர்களையே திருப்பித்தாக்கியுள்ளது என்றும் ஸ்ரான்லி திலகரட்னாமேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு எதிராக கொண்டுவந்த இப்பிரேரணையில் ஸ்ரான்லி திலகரட்னா கையொப்பம் வைக்காததும் குறிபபிடத்தக்கது.

இதனால் ஸ்ரான்லி திலகரட்னா மீது ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுககப் போவதாக அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

**எதிர்க்கட்சியினருக்கு:**

எனவும் அத்தீர்மானம் குறிப்பிட்டுள்ளது. இது விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளை தீவிரபபடுத்தவும் வழிகோலலாம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினரின் விரோத நடவடிக்கைகளுக்கு உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் உதவி கிடைததுள்ளதாக அரசபாராளுமன்றக் குழுவின் தீர்மானம் சுட்டிக்காட்டியுள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 10.10·91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# யூகோஸ், குரோவேஸியப் படைகள் முற்றுகைகளைக் கைவிட்டன

யூகோஸ்லாவியாவில் மீண்டும் யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இம்முறை ஏற்பட்ட யுத்த நிறுத்தம் மோதலில் ஈடுபடும் சமஷ்டி இராணுவ தளபதிக்கும் குரோவேஸிய காவற்படை தளபதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இதனால் தற்போது ஏட்ரியாற்றிக் கடற்பகுதியில் இரு தரப்பும் தாம் முற்றுகையிட்டிருந்த எதிரி நிலைகளை கைவிட ஒத்துக்கொண்டுள்ளனகுரோவேஸிய கடலேரம் யூகோ கடற்படையினர் முற்றுகையிட்டிருந்தனர் யூகோ இராணுவ முகாம்களை குரோவேஸிய படைகள் சூழ்ந்து முற்றுகையிட்டிருந்தன.

நேற்று ஒத்துக் கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தத்தில் இரு தரப்பும் தமது முற்றுகைகளை கைவிட வேண்டும் என நிபந்தனையும் உள்ளடங்கியிருந்தது.

குரோவேஸியாவின் கிழக்குப் புறப்பகுதியில் நேற்று சிறு மோதல் சம்பவங்கள் ஏற்பட்ட போதிலும் உக்கிரமற்ற மோதல்களாகவே அவை இருந்ததாகச்செய்திகள் தெரிவித்தன.

# சந்திரசேகரனை பார்வையிட அனுமதி

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரனை சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பகல் 12 மணிவரையும் அவரது சட்டத்தரணிகளும், உறவினர்களும் பார்வையிடலாம் என அப்பீல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது

இவரின் மனைவி திருமதி சாந்தி சந்திரசேகரத்தின் ஆட்கொணர்வு மனு மீதான விசாரணையைத் தொடர்ந்து நீதியரசர் சரத் என். சில்வா இந்த உத்தரவை குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு விடுத்துள்ளார்.

சந்திரசேகரன் பொலிஸ் தலைமை அலுவலக 6 ஆம் மாடியில் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளார்.

## பலாலியில் ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமிலிருந்தும், காங்கேசன்துறை கடற்பகுதியிலும் நேற்றுப் படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது (07)

# தொழிலதிபர் மூலம் சபாநாயகர் 'லஞ்சம்' பெற்றாராம்!

ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப்பிரேரணையை சபாநாயகர் நிராகரிப்பதற்கு அரச தரப்பிலிருந்து 'லஞ்சம்' வழங்கப்பட்டதாம்!

ஆளும் கட்சியின் ஆதரவாளரான பெரும் தொழிலதிபர் ஒருவரே சபாநாயகர் முஹமட்டுக்கு பத்துக் கோடி ரூபாவை லஞ்சமாக வழங்கியதாக 'ராவய' எனும் சிங்கள தினசரி செய்தி வெளியிட்டுள்ளது

# உத்தரப்பிரதேச அதிரடி 5 பொலிஸார் பலி!

உத்தரப் பிரதேச மாநிலத்தில் நேற்று தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் 5பொலிஸார் பலியாகியுள்ளனர்.

ரோந்துசென்றபொலிஸ் ஜீப் மீதே இத்திடீர்த் தாக்குதல் நடாத்தப்பட்டது இதே வேளை மற்றுமோர் சம்பவத்தில் பொலிஸ் நிலையம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகள் எந்தஅமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது அறிவிக்கப்படவில்லை.

## தமிழ் விழா

நல்லை திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு தமிழ்த் தாய் கலை பண்பாட்டுப் பேரவையின் தமிழ் விழா நடைபெறவுள்ளது

விழாவில் விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுப் பிரமுகர்கள் சிறப்புரையாற்றுவார்கள்.

விபுலானந்தர் நினைவாக நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டிக்கான பரிசில்கள் இவ்விழாவில் வைத்து வழங்கபடும். பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். 07

# இலங்கைப் பெண்ணுக்கு அபுதாபியில் கசையடி

அபுதாபியில் குற்றச் செயலில் ஈடுபட்ட இலங்கைப் பெண்மணி ஒருவருக்கு 150 கசையடிகளும் ஒரு வருட சிறைத் தண்டனையும் அங்குள்ள நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது.

இப்பெண்ணை நாடு கடத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது

இது குறித்து இலங்கைக்கு அறிவிக்கபட்டுள்ளது 08

## போலி விஸா பெண்கள் கைது

போலி இந்திய விஸாவுடன் தமிழ்நாடு பயணமாக விருந்த ஐந்து இலங்கைப்பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் அகப்பட்டுள்ளனர்.

இவர்கள் அடிக்கடி வியாபார நோக்கமாக இந்தியா சென்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது இவர்கள் இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

**அரச...**

மதாஸ தெரிவித்திருந்தார்.

அதிருப்தியாளர் குழுவை ஏற்கனவே ஐ தே க வில் சேர்க்க எடுத்து வந்த முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது

**எதிர்பாராத...**

நேற்றுச் சபை கூடும்போது எதிர்க்கட்சியினர் குழப்பம் விளைவிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எதிர்க்கட்சியினர் அமைதியாகக் காணப்பட்டனர்.

எனினும் இடையிடையே சூடான சொற் பிரயோகங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

# ஆசிரிய கலாசாலைகளுக்கு விண்ணப்பம்கோரப்படுகிறது

1992,93 ஆம் ஆண்டுகளில் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி நெறிகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கல்வியமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

பட்டம் பெறாத, பயிற்றப்படாத கல்வியதிகாரிகள் மற்றும் போதனாசிரியர்கள் சேவையூடான ஆசிரியர்கள் ஆகியோரே இதற்கு விண்ணப்பிக்கலாம்.

இதற்கான இறுதி விண்ணப்பத் திகதி 31.12 1991 ஆகும். மேலதிக விவரங்கள் 30 8 91 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## தாக்குதல் அதிகரிப்பு!

காரைநகர் பகுதியிலிருந்து குடிமனைகளை நோக்கி மேற்கொள்ளப்படும் எறிகணைத் தாக்குதல் கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளது.

பொன்னாலை, மூளாய் பகுதிகளில் விழுந்து வெடிக்கும் எறிகணைகளால் பெருமளவு வீடுகள் சேதமடைந்துள்ளன. இப்பகுதியில் ஹெலியின் தாக்குதலும் அடிக்கடி இடம்பெறுகிறது 37

## எதிர்க்கட்சி நம்பமுடியாத சபாநாயகர்

சபாநாயகர் எம். எச் முஹமட் தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றி பெற்றாலும் அவர் தொடர்ந்தும் எதிர்க்கட்சியினருக்கு நம்பிக்கையுள்ளவராக தென்படுவாரா என்பது சந்தேகமே என பி. பி ஸி. குறிப்பிட்டது.

## பிலிப் ஞாபகார்த்த போட்டிகள்

யாழ் உதைபந்தாட்ட லீக் வெகு விரைவில் இணைந்த கழகங்களுக்கிடையில் டாக்டர் பிலிப் ஞாபகார்த்த விலத்தல் முறைப் போட்டியையும், ஏ, பி பிரிவுகளுக்கிடையிலான லீக் முறையிலான போட்டியையும் நடாத்த உள்ளது. (16

## பீரங்கித் தாக்குதல்

மாதகல் கடல் பகுதியிலிருந்து நேற்றுக் கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் சேந்தான்குளம் பகுதியில் சில வீடுகள் சேதமடைந்தன.